திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, இத்தகைய பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று ஏற்கெனவே வடாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதே, அதை எப்போது ஆரம்பிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அப்படி அறிவித்ததாக எனக்கு நினைவு இல்லை.

தஞ்சையில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம்.

246—(*வினா எண். 16639)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் நவீன வசதிகளுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் மேல் கூரையுடன் கூடிய கட்டிடம் (Indoor Stadium) கட்ட அரசு ஏதேனும் ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திறந்தவெளி விளையாட்டு அரங்கம் ரூ.4.50 இலட்சம் மதிப்பீடு, உள் விளையாட்டு அரங்கம் ரூ. 14.22 இலட்சம் மதிப்பீடு, நிர்வாகக் கட்டிடம் ரூ. 6.50 இலட்சம் மதிப்பீடு.

(இ) முதல் கட்ட வேலையாக மேற்கூரையுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டு அரங்கம் கட்ட ரூ. 11.30 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

வீரமங்கலம் உயர் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் திட்டம்.

247—(*வினா எண். 18289)—திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டுத் தொகுதியில் வீரமங்கலம் உயர்தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?